[17th March 1964

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இந்த ரூ. 250 ஒவ்வொரு மாணவருக்கும் கொடுக்கப்படுகிறதா ? அல்லது 66 மாணவர்களுக்கும் சேர்ந்து கொடுக்கப்படுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இம்மாதிரி சந்தேகம் வந்து விடும் என்பதற்காகத்தான் ரிசர்ச் என்று சொன்னேன். ஒவ்வொரு மாணவனுக்கும் ரூ. 250 வீதம் 66 மாணவர்களுக்கும் கொடுக்கப்படு கிறது.

Government Rubber Plantations in Kanyakumari district

* 281 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR (on behalf of Sri R. PONNAPPA NADAR) : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) the extent of Government rubber plantation in Kanyakumari district; and

(b) the daily wages paid to each labourer?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :

(அ) 1,476 ஏக்கரா.

(ஆ) ஆண்—ரூ. 1·50.

பெண்—ரூ. 1·00.

சிறுவர்—ரூ. 0·75.

தமிழ் வளர்ச்சிக்கான மத்திய மானியம்

*286 கேள்வி—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) முதல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழ் மொழி வளர்ச்சிக்காக மத்திய அரசாங்க மானியம் எவ்வளவு நமது மாநிலத்திற்குக் கிடைத்தது ?

(இ) மேற்படி மானியம் எந்தெந்த துறைக்கு எவ்வளவு பகிர்ந்து கொடுக்கப்பட்டது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) No grant was received from the Government of India during the first and second year Plan periods for the development of Tamil.

(b) Does not arise.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் இந்தி மொழி வளர்ச்சிக்காக நிறையப் பணம் செலவிடுகிறபோது, தேசிய மொழிகளில் ஒன்ருன தமிழ் மொழியின் வளர்ச்சிக்குச் செலவிட மத்திய அரசாங்கத்தினிடம் தொகை கோரக்கூடாதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தி பேசாத பிராந்தியங்களில் இந்தியைப் பரப்ப மத்திய அரசாங்கத்தார் உதவி செய்கிருர்கள். தமிழ் பேசாத பிராந்தியங்களில் தமிழைப் பரப்புவதற்கும் அவர்கள் செலவு செய்கிருர்கள். அது மட்டுமல்ல. தமிழை வளர்ப்பது நம்முடைய பொறுப்பு. அதிலே நமக்கு அக்கறை இருக்கிறது. இருந்தாலும் இப் பொழுது மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஐந்து லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தனியாக ஒரு இனம் ஒதுக்கி வைத்திருக்கிறேம். ஓரளவு மானியம் மத்திய அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும்.